
# திராவிடத்தால் வாழ்கிறோம்

838

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

11

# கலைஞர் அளித்த உறுதிமொழி!



**தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுப்பூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்**

திராவிட இயக்கம், இஸ்லாமியர்களுக்குச் செய்த நன்மைகளுள் எல்லாம் தலையான நன்மை எதுவென்றால், அவர்களுக்கு உரிய இடஒதுக்கீட்டு உரிமையினைப் பெற்றுத் தந்ததுதான். திட்டங்களைத் தீட்டவும் நிறைவேற்றவும், நிதியும் மனமும், கைவசம் ஆட்சியும் இருந்தால்போதும். ஆனால், இட ஒதுக்கீடு கொடுத்தது அப்படியான ஒன்றல்ல. நெடிய போராட்டம். அந்தப் போராட்டத்தில் கலைஞர் பெற்ற வெற்றிதான், இன்று தமிழ்நாட்டில் கல்வி, வேலைவாய்ப்புகளில் முஸ்லிம்களின் உரிமை நிலைநாட்டப் பட்டுள்ளது.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரக் களத்தில், பிரதமர் நரேந்திர மோடி, இஸ்லாமியர்கள் குறித்து பாகுபாடான பல கருத்துகளைக் கூறியதை அறிவோம். குறிப்பாக, ‘இஸ்லாமியர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் இடஒதுக்கீட்டை ரத்து செய்ய வேண்டும்’ என சர்ச்சைக்குரிய வகையில் குறிவைத்துத் தாக்கினார். ‘காங்கிரஸ் கூட்டணி ஆட்சிக்கு வந்துவிட்டால், பிற்படுத்தப்பட்ட- பட்டியல் சமூகங்களின் இடஒதுக்கீட்டைப் பிடுங்கி, இஸ்லாமியர்களுக்குக் கொடுத்துவிடுவார்கள்’ என்றார். ‘மதத்தின் அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்குவதே தவறு’ என்றும் மோடி பேசினார்.

2024-ஆம் ஆண்டிலேயே, பல்வேறு வகைகளில் சமூக, பொருளாதார பிரதிநிதித்துவம் பெற்றுள்ள நிலையிலேயே , இடஒதுக்கீட்டிற்காக இஸ்லாமிய சமூகம், இத்தனை நெருக்கடிகளை எதிர்கொள்கிறது என்றால், இட ஒதுக்கீடு வேண்டும் என குரல் எழுப்பிய தொடக்கக் காலங்களில் எத்தனைப் போராட்டங்களை, இந்திய அளவில் சந்தித்திருப்பார்கள் என யோசிக்க வேண்டியிருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் 1970-களிலேயே அதற்கான விதைகளை அழுத்தமாக நட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர். அந்த வரலாற்றை அறிந்துகொள்ளும் முன்பு, இடஒதுக்கீடு மற்றும் மண்டல் கமிசன் குறித்து, சில தகவல்களைப் புரிந்துகொள்வதும், இந்திய அளவில் இஸ்லாமியர்களுக்கான இடஒதுக்கீடு எப்படி நடைமுறைக்கு வந்தது என்று அறிந்துகொள்வதும் அவசியமானது.

## அரை நூற்றாண்டுப் போராட்டம்

இந்தியத் துணைக்கண்டம் கல்வி- பொருளாதாரம்- சமூக நிலை அனைத்திலும், மாடிப்படிக்கட்டுகளைப் போல சமத்துவமின்மையுடன் அமையப்பெற்றது. சமூக நிலையில் யாரெல்லாம் உயர்ந்து இருக்கிறார்களோ, அவர்கள் கல்வியிலும், பொருளாதாரத்திலும் உயர்ந்தவர்களாக இருந்தனர். சமூக நிலையில் யாரெல்லாம் ஒடுக்கப்பட்டு இருந்தார்களோ, அவர்கள் கல்வியிலும் பொருளாதாரத்திலும் தாழ்ந்து இருந்தார்கள். இதில் கடைநிலையில் உள்ள தாழ்த்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடும், கல்வி-வேலைவாய்ப்பு உரிமைகளும் அரசியலமைப்புச் சட்டத்தின் ஊடாகவே நிலைநிறுத்தப்பட்டு விட்டன. அடுத்த நிலையில் இருக்கும் பிற்படுத்தப்பட்டோருக்கான உரிமைகளுக்கு அரை நூற்றாண்டுக்கும் மேலாகப் போராட வேண்டியிருந்தது.

அண்ணல் அம்பேத்கர் தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்ததற்கான காரணங்களில் ஒன்றாக பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு கோரிக்கையும் இருந்தது. அத்தகைய பிற்படுத்தப்பட்டோருக்கான கல்வி - பொருளாதார நிலை குறித்து, ஆராய அமைக்கப்பட்டதே மண்டல் கமிசன்.

1979-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதி, மொரார்ஜி தேசாய் பிரதமராக இருந்த காலத்தில் அமைக்கப்பட்டது, இந்த கமிசன். அடுத்த ஆண்டில், அதாவது 1980-இல் தாக்கல் செய்யப்பட்ட இந்த கமிசனின் அறிக்கை, இதர பிற்படுத்தப்பட்டோருக்கு 27% இடஒதுக்கீட்டைப் பரிந்துரை செய்தது.

அடுத்தடுத்து அமைந்த இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி அரசுகள் அதற்கான முயற்சிகளை எடுக்கவில்லை. 1989-இல் அமைந்த வி.பி.சிங் அரசு, மண்டல் கமிசன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி, சுதந்திர இந்தியாவில் முதன்முறையாக இதர பிற்படுத்தப்பட்டோருக்கான அகில இந்திய இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தத் துணிந்தது. அதை எதிர்த்து, சிலர் உச்சநீதிமன்றம் சென்றார்கள். அப்படிச் சென்றவர்கள் பார்ப்பன உயர்சாதி இந்துக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், உச்ச நீதிமன்றம் சில மாற்றங்களுடன் அதன் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டது. 3,743 சாதிகளை உள்ளடக்கிய இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு 27% இட ஒதுக்கீட்டை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தினார் வி.பி.சிங். அதில் இஸ்லாமிய சமூகத்தின் சில பிரிவுகளையும் இதர பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் இணைத்திருந்தது மண்டல் கமிஷன்.

> இந்திய முஸ்லிம்களின் பிரதிநிதித்துவ நிலையானது, பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினரின் நிலைமைகளுக்கும் தாழ்ந்து இருப்பதாக ‘சச்சார் குழு’ முடிவு செய்தது.

அதேபோல, தேசிய மத மற்றும் மொழி சிறுபான்மையினர் ஆணையம், இந்தியாவில் மொழி மற்றும் மத சிறுபான்மையினர் தொடர்பான பல்வேறு பிரச்சினைகளை ஆராய்வதற்காக, 2004-ஆம் ஆண்டு அக்டோபர் 29-ஆம் தேதி, ரங்கநாத் மிஸ்ரா ஆணையத்தை அமைத்தது ஒன்றிய அரசு. 2007-ஆம் ஆண்டு மே மாதம் 21-ஆம் தேதி, அந்த ஆணையம் சமர்ப்பித்த அறிக்கையில், அரசு வேலைகளிலும், அனைத்து உயர்கல்வி நிறுவனங்களிலும் இஸ்லாமியர்கள் மற்றும் பிற சிறுபான்மையினருக்கு இடஒதுக்கீடு வழங்க பரிந்துரை செய்திருந்தது. இஸ்லாம் அல்லது கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய தாழ்த்தப்பட்ட சமூகத்தினர், பட்டியல் சாதி இடஒதுக்கீட்டின் கீழ் இட ஒதுக்கீட்டு உரிமைகளைப் பெற வேண்டுமென்றும் பரிந்துரைத்தது. ஆனால், அந்த அறிக்கையை பா.ஜ.க. கடுமையாக எதிர்த்தது.

குறிப்பாக, 2014-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9-ஆம் தேதி, கேரளாவில் தனது பிரச்சாரத்தின்போது, மிஸ்ராவின் அறிக்கை, ‘தலித் சமூகங்களின் பாதுகாப்பின்மையை’ உருவாக்கியதாக நரேந்திர மோடி விமர்சித்தார். அதன் தொடர்ச்சியாகத்தான் தற்போதும் விமர்சித்துக் கொண்டிருக்கிறார். மிஸ்ரா ஆணையம் அமைக்கப்பட்ட அதே கால கட்டத்தில், நீதியரசர் ராஜேந்தர் சச்சார் தலைமையில், இஸ்லாமியர்களின் சமூக பொருளாதார கல்விநிலையை ஆய்வு செய்ய, ஓர் உயர் நிலைக்குழுவை அமைத்தது ஒன்றிய அரசு.

## சச்சார் குழு

2005-ஆம் ஆண்டு மார்ச் மாதம் அமைக்கப் பட்ட இந்தக் குழுவில், ஏழு உறுப்பினர்கள் இடம்பெற்றனர். இந்த உயர்மட்டக் குழு, பொருளாதார, அரசியல் மற்றும் சமூக நீரோட்டத்தில் இந்திய முஸ்லிம்கள் முழுமையாக பங்கேற்பதைத் தடுக்கும் தடைகளை அகற்றுவது எவ்வாறு என்பதற்கான முக்கிய பரிந்துரைகளை வழங்கியது.

இந்திய மக்கள் தொகையில் முஸ்லிம்கள் 14%-ஆக இருக்கும்போது, அவர்கள் இந்திய அதிகாரத்துவத்தில் 2.5% மட்டுமே உள்ளனர். இந்திய முஸ்லிம்களின் பிரதிநிதித்துவ நிலையானது, பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினரின் நிலைமைகளுக்கும் தாழ்ந்து இருப்பதாக ‘சச்சார் குழு’ முடிவு செய்தது. அந்தக் குழுவின் அறிக்கை, இந்திய முஸ்லிம்களின் சமத்துவமின்மைப் பிரச்சினையை தேசிய அளவிலான கவனத்திற்குக் கொண்டு வந்தது.

தேசிய அளவில், இஸ்லாமியர்களின் சமூகப் பொருளாதார நிலையைப் புரிந்து கொள்ள இந்த 3 அறிக்கைகளும் முக்கிய ஆதாரங்களாக அமைந்தன. அதேநேரத்தில், தமிழ்நாட்டில் இஸ்லாமியர்களுக்குத் தனி இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துவதற்கு இந்த அறிக்கைகளைப் பயன்படுத்திக் கொண்டார் கலைஞர்.

இஸ்லாமியர்களின் சமூக- வாழ்வாதார- கல்விப் பிரச்சினைகளில் திராவிட இயக்கம் உடன் நின்றது மட்டுமல்ல; ஆட்சி அதிகாரத்துக்கு வந்த நிலையில், 1973-ஆம் ஆண்டிலேயே உருது பேசும் முஸ்லிம்களைப் பிற்படுத்தப் பட்டோர் பட்டியலில் சேர்த்து, அவர்களுக்கான சலுகையை வழங்கியவர் கலைஞர்.

1999-ஆம் ஆண்டு ‘இப்தார் விழா’வில் பேசுகையில்கூட, ‘இஸ்லாமியர்களுக்கு உரிய இட ஒதுக்கீடு வருகிற நேரத்தில் வரட்டும், அதற்கிடையில் அதற்காக காத்திருக்காமல், குறிப்பிட்ட சதவிகிதத்தை ஒதுக்குவேன்’என உறுதி அளித்தார். அவர் அளித்த உறுதிமொழிதான், தமிழ்நாட்டு முஸ்லிம்களின் வாழ்க்கையில் இன்று நிகழ்ந்துள்ள முன்னேற்றங்களுக்குக் காரணம்.

...நீளும்

## வழக்கை வலுவாக்கிய எதிர்க்கட்சிகள்!

பொள்ளாச்சியில் இளம் பெண்கள் பாலியல் வன்கொடுமை வழக்கில், கைதான 9 பேருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை அளித்து, கோவை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதுதொடர்பாக, தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர், பத்திரிகையாளர் கோவி.லெனின் தனது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

‘அந்த 9 பேரையும் எப்படியாவது காப்பாற்றியாக வேண்டும் என அப்போதைய அ.தி.மு.க. அரசு படாதபாடுபட்டது. குற்றவாளிகளில் ஒருவரான அருளானந்தம் அ.தி.மு.க. மாணவர் அணியைச் சேர்ந்தவர். மற்ற குற்றவாளிகளுக்கும் அ.தி.மு.க.வின் அன்றைய அமைச்சர்களுடன் தொடர்பு உண்டு. அ.தி.மு.க. பிரமுகர்களுடைய மகன்களின் நண்பர்கள் என்பதையே தங்களின் தொடர் பாலியல் குற்றச்செயல்களுக்கான லைசென்சாகப் பயன்படுத்தினார்கள், இந்தக் குற்றவாளிகள். சிக்கிய பிறகு, திருநாவுக்கரசு என்ற குற்றவாளி இந்த உண்மையை வெளிப்படுத்தினார். பாதிக்கப்பட்ட பெண் புகார் தந்தும், 10 நாட்களுக்கும் மேலாக எஃப்.ஐ.ஆர். போடாமல் இழுத்தடித்தது எடப்பாடி பழனிச்சாமி ‘சார்’ அரசு.

குற்றவாளிகளைக் காப்பாற்றும் முயற்சியே அ.தி.மு.க. அரசிடம் வெளிப்பட்டது, நெஞ்சை அறுக்கும் குரலில் கதறிய பெண்ணின் வீடியோவை (முகம் மறைத்து) வெளியிட்ட நக்கீரன் பத்திரிகையை, குற்றவாளியைப் போல சித்தரிக்க முயன்றனர், சி.பி.சி.ஐ.டி. போலீசார். பொள்ளாச்சி தி.மு.க. நிர்வாகிகள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர், மகளிர் அமைப்பினர் நடத்திய போராட்டங்களுக்குப் பிறகு, சி.பி.ஐ.க்கு வழக்கு மாற்றப்பட்டது.

சி.பி.ஐ. அலுவலகத்தில் சாட்சி விசாரணையாக அழைக்கப்பட்டார் நக்கீரன் ஆசிரியர். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு கவுன்சிலிங் அளிக்கப்பட்டு, நம்பிக்கை தரப்பட்டதன் விளைவாக சாட்சியங்கள் அளித்தனர். அவை வழக்கை வலுவாக்கியதன் விளைவாக, அ.தி.மு.க. பிரமுகர் உள்பட 9 பேரும் குற்றவாளிகள் என தீர்ப்பு அளித்துள்ளது நீதிமன்றம். யார் அந்த சார் ? என்று கேட்ட அ.தி.மு.க.வில், எடப்பாடி சார் உள்பட ஏராளமான சார்கள் இருக்கிறார்கள்’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### திருமண நிகழ்வில் தளபதி அவர்களுடன் ஒரு படம்!



ஓ.ஆறுமுகம்

2000-ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டத்தில், கழக உடன்பிறப்பு ஒருவரின் இல்லத் திருமண விழாவிற்கு, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் வருகை தந்திருந்தார். திருமண நிகழ்வில், கழகத்தினர் பலரும் தளபதி அவர்களுடன் தனித்தனியாகப் புகைப்படம் எடுத்துக்கொண்டோம். இந்தப் படத்தில், தளபதி அவர்களுடன் இருப்பவர், இன்றைய புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன்.

– ஓ.ஆறுமுகம்,
மாவட்ட இலக்கிய அணித் துணை அமைப்பாளர்,
குளத்தூர், புதுக்கோட்டை வடக்கு

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### ஒவ்வொருவரின் ஒத்துழைப்பும் தேவை!

1967-ஆம் ஆண்டு மார்ச் 6-இல் முதலமைச்சராகப் பதவியேற்ற பேரறிஞர் அண்ணா, மார்ச் 14-ஆம் தேதி வானொலியில் பேருரையாற்றினார். “நண்பர்களே! உங்களுக்காக நான் என்பது மட்டுமல்ல, இன்னும் உண்மையைச் சொல்வதானால் உங்களால் நான் - கடமையை மறந்திடுபவனல்ல நான். என் கடமையை நான் செய்து முடித்திட, உங்கள் ஒவ்வொருவருடைய ஒத்துழைப்பும் தேவை” என கேட்டுக் கொண்டார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131